| அசல் வழக்கு எண்.146/2018 | | பி.சா.1 | தேதி.12.04.2023 |
|---|---|---|---|
| பெயர் | திரு.பாலகுமார் | வயது | 54 |
| த/பெ. | திரு. ராஜீ | முகவரி | 87, பட்டியண்ணன் நகர் முதல் கிராஸ், வடவள்ளி, தொண்டாமுத்தூர் ரோடு |
| வட்டம் | மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோயமுத்தூர் |

பி.சா.1 முன்னிலை உறுதிமொழி எடுக்கப்பட்டது

குறுக்கு விசாரணை

நான் கோயமுத்தூரில் 13 வருடமாக குடியிருந்து வருகிறேன். தந்தையார் இறப்பிற்கு முன்பாக உடுமலைப்பேட்டையில் குடியிந்தேன். உடுமலைப்பேட்டையில் 4 ஆண்டுகள் குடியிருந்தேன். என் தந்தை இறப்பதற்கு முன்பாக வாதியின் அம்மாவுடன் தான் இருந்தார் என்றால் எனது அம்மாவும், அப்பாவும் தனியாக சிறுமுகையில் தான் இருந்தார்கள். வாதியின் தாயார் சிறுமுகையில் இருந்தார்களென்றால் சிறுமுகை, சௌடேஸ்வரி நகரில் இருந்தார்கள். எனக்கு உயில் எழுதி வைத்ததாக சொல்லக்கூடிய சொத்து புல எண். 700 உள்ளதாக சொன்னால் எனக்கு சர்வே எண் எனக்கு தெரியாது. மேற்கண்ட உயிலாவனத்தின்படி எனக்கு 16 சென்ட் கொடுத்தார்களென்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சொத்து போக புல எண். 78/1 ல் 5 சென்ட் நிலம் உள்ளதென்றால் அது தனியாக சிறுமுகையில் உள்ளது. அந்த உயிலாவணத்தில் 15 சென்ட் தான் எனக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதைத் தவிர வேறு எந்த சொத்து இருந்தாலும் அவர்கள் எடுத்துக் கொள்ளட்டும்.

( வழக்குச் சொத்துக்களில் மேலும் சொத்துக்களை சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளதால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கவேண்டுமாய் வாதி தரப்பு வழக்குரைஞர் கேட்டுக் கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

**ஒப்பம்/-பெ.க.சிவக்குமார்**

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.